# இருவழிச் சாலையில் இருந்து நான்கு வழிச் சாலை: ரூ.6,665 கோடி மதிப்பீட்டில் 831 கி.மீ. நீளத்தில் அகலப்படுத்தும் பணிகள்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு உரை... 11 ஆம் பக்கத் தொடர்ச்சி

துறைப் பொறியாளர்கள் கொண்ட ‘பாலங்கள் சிறப்பு ஆய்வு அலகு’ என்று ஒன்றை நாம் உருவாக்கி இருக்கிறோம். பாலங்களில் காலமுறை ஆய்வு மேற்கொள்ளவும், புதிதாக கட்டப்படும் பாலங்களில் கூராய்வு மேற்கொள்ளவும், தலைமைப் பொறியாளர், திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு அவர்களின் தலைமையில் இந்த அலகு செயல்படுகிறது.

கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவு இல்லத்தையும், அய்யன் திருவள்ளுவர் சிலையையும் இணைக்கும் வகையில் கடலில் நடை மேம்பாலம் கட்ட 2016 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் சுற்றுலாத் துறையின்மூலம் ஓர் ஒப்புதல் வழங்கப்பட்டது. கண்ணாடிப் பாலம் குறித்த தகவலை, தயவுசெய்து நீங்கள் சற்று கூர்ந்து கவனிக்க வேண்டும்.

**கன்னியாகுமரி கண்ணாடிப் பாலம்!**

ஒன்றிய அரசாங்கம் சுற்றுலாத் துறையின்மூலமாக இந்தப் பாலத்தை நீங்கள் கட்டுங்கள் என்று ஒரு ஒப்புதலை 2016ல் சுற்றுலாத் துறைக்கு அனுப்பியது. 2016ல் சுற்றுலாத் துறையினர் பார்த்துவிட்டு, இந்தப் பாலத்தை எங்களால் கட்ட முடியாது என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு மீன் வளத் துறைக்குப் போகிறது. இப்படி பல துறைகளுக்குப் போகிறது. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு முறைக்கு நான்கு முறை கூட்டம் நடைபெறுகிறது. ஆனாலும், அந்தப் பாலம் கட்டுகிற நிலை வரவில்லை. கடைசியாக 2020ல் நெடுஞ்சாலைத் துறை மூலமாகக் கட்டலாம் என்று ஒரு முடிவு செய்யப்பட்டு, அரசாங்கத்தினால் நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கப்படுகிறது. ஆனால், 2020ல் நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கப்பட்ட அந்தப் பாலம் கட்டுகிற பணி தூங்கிக் கொண்டேயிருக்கிறது.

அதற்குப் பிறகு, எங்கள் துறை சம்பந்தப்பட்ட ஓர் ஆய்வுக் கூட்டத்தை தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் நடத்தினார்கள். அந்த ஆய்வுக் கூட்டத்தை முதலமைச்சர் அவர்கள் நடத்துகிறபோது, ‘இந்தப் பாலம் கட்டுகிற பணி என்கிற கோப்பு 5 ஆண்டு காலமாக தூங்கிக் கொண்டிருக்கிறது, நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?’ என்ற ஒரு கேள்வியை எங்களிடத்தில் கேட்டார்கள். அதற்குப் பிறகு இருக்கிற நிலைமையை எடுத்துச் சொன்னேன். இப்பணி, இரண்டு பாறைகளை இணைத்துக் கட்டுகிற கடல் பாலம் தொடர்பான பணி. கடலில் கடல் சீற்றம் இருக்கும், புயல் இருக்கும் என்ற பல்வேறு காரணங்களால், ஒவ்வொரு துறையும் தட்டிக் கழித்துக் கொண்டுவிட்டார்கள். யாரும் இதைக் கட்ட முன்வரவில்லை.

அதனால் கிடப்பிலே இருக்கிறது என்று கூறியபோது, முதலமைச்சர் அவர்கள், ‘முயற்சி திருவினையாக்கும்’, ‘எண்ணித் துணிக கருமம்’ என்ற இரண்டு வரிகளை எங்களிடத்தில் கூறி, ‘கண்ணாடி இழைப் பாலத்தை அமையுங்கள்’ என்று கூறினார்கள். அங்கு பாலம் அமைப்பதற்கான கோப்புகள்தான் ஏற்கெனவே இருந்தன. ஆனால், முதலமைச்சர் அவர்கள்தான், ஏன் இதை கண்ணாடி இழைப் பாலமாக அமைத்தால் என்ன? என்று கேட்டு, அறிவுரைகள் வழங்கியதன் அடிப்படையில்தான், எங்களுடைய தலைமைப் பொறியாளர் சந்திரசேகர் அவர்களையும், சென்னை ஐ.ஐ.டி.யின் பேராசிரியர் பெருமக்கள் ஆகியோரையும் அழைத்துப் பேசி, ஒருமுறைக்கு மூன்று முறை கூட்டங்களை நடத்தி, 77 மீட்டர் நீளமும், 10 மீட்டர் அகலமும் கொண்ட கண்ணாடி இழைப் பாலம் கடலின் நடுவே ‘Network Arch Bridge’ என்ற நவீன முறையில் (மேசையைத் தட்டும் ஒலி) 64 மெக்காலேகம்பிகள் பயன்படுத்தி கட்டப்பட்டு, 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் தேதி முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் அது திறந்துவைக்கப்பட்டது.

## தியாகி இமானுவேல் சேகரனாருக்கு இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில், ரூ. 3 கோடி மதிப்பீட்டில், திருவுருவச் சிலையுடன் கூடிய நினைவு மண்டபம் அமைக்கப்பட்டு, விரைவில் முதலமைச்சர் திறந்து வைக்கிறார்!

**தமிழ்நாட்டின் பெருமை - அலைமேல் ஒரு நடை!**

சீனாவில் Zhangjiajie என்கிற வனப் பகுதியில் கண்ணாடிப் பாலம் இருக்கிறது. வியட்நாமில் Moc Chau தீவில் கண்ணாடிப் பாலம் இருக்கிறது. இந்தியாவில் பீகார் வனப் பகுதியில் கண்ணாடிப் பாலம் இருக்கிறது. ஆனால், இந்தியாவிலே கடல் நடுவே கட்டப்பட்டிருக்கிற ஒரே கண்ணாடி இழைப் பாலம் தமிழ்நாட்டில் மட்டும்தான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கண்ணாடி இழைப் பாலத்தை இன்று வரை ஏறத்தாழ 6 இலட்சத்து 31 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் கண்டுகளித்திருக்கிறார்கள்.

உலகச் சுற்றுலாப் பயணிகள் வியக்கத்தக்க வகையில் குமரி முனையின் புதிய அடையாளமாக கண்ணாடி இழைப் பாலம் திகழ்கிறது. அதனால், நேற்றைய தினம் பார்த்தேன்.— இந்தியாவில் வெளியாகும் The Indian Express என்ற ஆங்கிலப் பத்திரிகையில் இந்தக் கண்ணாடி இழைப் பாலத்தைப் பற்றி ஒரு முழு articleஐ எழுதியிருக்கிறார்கள். அதை நான் சுருக்கமாகச் சொல்கிறேன்; ‘தமிழ்நாட்டினுடைய பெருமை’‘The pride of Tamil Nadu’ என்ற தலைப்பில், ‘அலைமேல் ஒரு நடை’‘A walk over the waves’ என்ற ஓர் அற்புதமான தலைப்பில் இப்பாலத்தின் சிறப்புகளைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

**நிகழ்கால பொறியியல் அதிசயம்!**

இதைப் பற்றி இன்னொன்று சொல்ல வேண்டுமென்றால், உத்தரப்பிரதேசம் மாநிலம், மதுராவைச் சேர்ந்த பேராசிரியர் மிகிர் குமார் அவர்கள், இந்தியாவின் கட்டடத் துறையில் கட்டப்பட்ட உயர்தரப் படைப்பு இது என்று சொன்னால், என்னால் நம்ப முடியவில்லை, நான் பார்த்துப் பார்த்து வியந்து போனேன் என்று இப்பாலத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு மட்டுமல்ல, The Week என்ற ஓர் ஆங்கிலப் பத்திரிகை, குமரிக் கண்ணாடி இழைப் பாலம் இந்தியாவினுடைய தெற்கு முனைக்கு திரும்பத் திரும்ப அழைக்கும் ஒரு வியக்கத்தக்க உணர்வு; திரும்பத் திரும்ப எங்களை அழைக்கிற வியக்கத்தக்க உணர்வு என்று சொல்லிவிட்டு, bowstring வளைவு முறையில் கட்டப்பட்ட இந்தப் பாலம் நிகழ்கால பொறியியல் அதிசயம் என்று சொன்னால் அது மிகையாகாது என்று இந்தப் பாலத்தைப் பற்றி கூறியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இந்தக் கண்ணாடி இழைப் பாலம் அமைப்பதற்கு எங்களுக்கு உந்துசக்தியாக இருந்தவர், ‘முயற்சி திருவினையாக்கும்’, ‘எண்ணித் துணிக கருமம்’ என்பதை எங்களுக்குச் சுட்டிக்காட்டிய தமிழ்நாட்டு முதலமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு இந்த நெடுஞ்சாலைத் துறை தற்போது சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது.

இதைத் தொடர்ந்து இன்னொரு துறை பற்றி சேர்த்து பேசிவிடுகிறேன். 1532025 அன்று நம்முடைய நிதிநிலை அறிக்கை பற்றி பத்திரிகைகளெல்லாம் பாராட்டியிருக்கின்றன. Business Line, Deccan Chronicle, The Hindu, The Indian Express, The Times of India and The Economic Times ஆகிய பத்திரிகைகள் இந்தியா முழுவதும் படிக்கின்ற ஆங்கிலப் பத்திரிகைகளாகும்; அவை நம்மூரில் மட்டும் படிக்கின்ற பத்திரிகைகள் அல்ல. அவற்றில், 2025-2026 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை பற்றி, அவரவர்கள் ஒரு தலைப்புக் கொடுத்து மிகச்சிறப்பாக எழுதியிருக்கிறார்கள். நேரம் காலம் கருதி அவற்றை குறிப்பாகச் சொல்லிவிட்டேன். அப்படிப்பட்ட சிறப்பான இந்த நிதிநிலை அறிக்கையில், பொதுப் பணித் துறைக்கு 2,457 கோடி ரூபாயை முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கீடு செய்ததற்காக, துறையின் சார்பாக அவர்களுக்கு முதலில் நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**நெடுஞ்சாலைத்துறை பாதுகாப்பான சாலைகளை வழங்குவதோடு மட்டும் அல்லாமல் பசுமையான சாலைகளையும் அமைத்து வருகிறது.**

**பொதுப் பணித் துறையின் சிறப்புகள்!**

பொதுப் பணித் துறையின் சிறப்புகள் பற்றி உங்கள் அனைவருக்கும் தெரியும்; பாரம்பரியக் கட்டடங்களைப் புதுப்பிக்கவும், மறுசீரமைக்கவும் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு 4—10-2024 அன்று ஒரு புதிய மரபுக் கட்டடங்கள் வட்ட அலுவலகம் நம்முடைய முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப் பட்டது.

**புதுப்பிக்கப்படும் பாரம்பரியக் கட்டிடங்கள்!**

அந்த வகையில்தான், திருச்சியில் 16 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இராணி மங்கம்மாள் அரண்மனை ரூ.9 கோடி மதிப்பீட்டிலும், 17 ஆம் நூற்றாண்டில் நாயக்க மன்னர்களால் கட்டப்பட்ட இராணி மங்கம்மாள் கொலு மண்டபம் என்னும் சொக்கநாத நாயக்கர் அரண்மனை ரூ.29 கோடி மதிப்பீட்டிலும் புதுப்பிக்கப்படுகின்றன.

ஆரணியில் 1905 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட சத்ய விஜய நகர அரண்மனை ரூ.12 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படுகிறது. தஞ்சாவூரில், 1824 ஆம் ஆண்டு, சரபோஜி மன்னரால் கட்டப்பட்ட அரண்மனை மற்றும் தர்பார் ஹால் பகுதிகள் ரூ.30 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படுகின்றன.

சிவகங்கை மாவட்டத்தில் 16 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டு வேலுநாச்சியார் மற்றும் மருது சகோதரர்கள் போர்ப் பயிற்சியில் ஈடுபட்ட சங்கரபதி கோட்டை ரூ.9 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படுகிறது. மதுரையில், 17 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட திருமலை நாயக்கர் மஹாலில் பள்ளியறை மற்றும் நாடக சாலைரூ.8கோடிமதிப்பீட்டில்புனரமைக்கப்படுகிறது. மேலும், 12 பாரம்பரியக் கட்டடங்கள் ரூ.113 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படுகின்றன.

**கலைஞர் உலகம் அருங்காட்சியகம்!**

கலைஞர் நினைவிடத்தில் “கலைஞர் உலகம்“ அருங்காட்சியகம் தரை மட்டத்தில் இருந்து ஏறத்தாழ 15 அடிக்குக்கீழ் அமைந்துள்ள நிலவறையாகும். இந்த அருங்காட்சியகத்தில் (Underground Museum) “கலைஞர் உலகம்“ அருங்காட்சியம் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, கலைஞரின் வாழ்க்கை வரலாறு அனைவரையும் கவரும் வகையில் அழகுறச் சித்திரிக்கப்பட்டு உள்ளது. இந்த அருங்காட்சியகம் 26—2-2024 அன்று, முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரத்தால் திறந்து வைக்கப்பட்டது. இன்று 31—3-2025 வரை, சுமார் 5.32 இலட்சம் பேர் இதனை கண்டுகளித்து உள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி)

“தமிழன், திராவிடன்“ என்ற சொற்களை அடையாளச் சொற்களாக மாற்றியமைத்த அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுக்கு சிறப்பு செய்ய வேண்டுமென்பதற்காக முதலமைச்சர் அவர்கள், அயோத்திதாசப் பண்டிதர் பிறந்த 175வது ஆண்டினைக் கொண்டாடும் வகையில், ரூ.2.48 கோடி மதிப்பீட்டில், கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அவரது திருவுருவச் சிலையுடன் மணிமண்டபம் அமைக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரத்தால் 11-2-2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.

பசும்பொன் கிராமத்தில் உள்ள தெய்வீகத் திருமகனார் உ.முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்தில், பிரமுகர்களுக்கான காத்திருப்போர் அரங்கம் ரூ.1.55 கோடியில் கட்டப்பட்டு, 28—10-2024 அன்று முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரத்தால் திறந்து வைக்கப்பட்டது.

அன்றைய தென்னாற்காடு மாவட்டத்தின் திராவிட இயக்க தலைவர்களில் ஒருவரும் அண்ணாவின் தம்பியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தோழரும், ஏ.ஜி. என்று அன்பாக அழைக்கப்பட்டவருமான அண்ணன் ஏ.கோவிந்தசாமி அவர்களுக்கு, விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டியில், 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில், திருவுருவச் சிலையுடன் நினைவகம் அமைத்து, முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. நான் ஒரு நிகழ்வை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். எப்படிப் பொருத்தமாக அமைந்திருக்கிறது என்பதை மணி போன்றவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். நம்முடைய முதல மைச்சர் அவர்களுக்கு இளம் வயது. ஆனால் ஏ. கோவிந்தசாமி இறந்தபோது முதலமைச்சர் அவர்கள் ஓர் இளைஞர். அப்போது படத் திறப்பு நடக்கிறது. அந்தப் படத் திறப்பில் தந்தை பெரியார் அவர்கள் கலந்து கொள்கிறார்கள்; அண்ணன் மதியழகன் கலந்து கொள்கிறார்கள்; அண்ணன் என்.வி. நடராசன் கலந்துகொள்கிறார்கள்; எங்கள் ஊரைச் சேர்ந்த அண்ணன் ப.உ.ச கலந்துகொள்கிறார்கள்; தந்தை பெரியார் கலந்து கொண்ட அந்தப் படத் திறப்பில், அண்ணன் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்து திறந்து வைக்கிறார். அந்த நிகழ்வில், முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு இளைஞராக இருந்தபோது, தான் உழைத்த உழைப்பு, தான் உழைத்த உழைப்பு என்பது கலையுலகத்தையும், கழகத்தையும் எப்போதும் யாரும் பிரித்தே பார்க்க முடியாது. அன்றையதினம் ஒரு நாடகத்தை நடத்தி, அண்ணன் கோவிந்தசாமி குடும்பத்திற்கு ஒரு நிதி வழங்க வேண்டுமென்று அவரே உழைத்து நடித்த பணத்தை முதலமைச்சர் அவர்கள் தருகிறார்கள். இதிலே பார்த்தால் ஒரு சின்ன படம் இருக்கிறது.

(பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அந்த நிகழ்வை நினைவுகூரும் விதமாக ஒரு புகைப் படத்தை சட்டமன்ற உறுப்பினர்களிடம் காண்பித்தார்)

அண்ணன் கோவிந்தசாமி உறவு என்பது, முதலமைச்சர் அவர்கள் அன்றைக்குப் பணம் கொடுத்திருக்கிறார்; இன்றைக்கு அவருடைய திருவுருவச் சிலையையும், மணி மண்டபத்தையும் தன்னுடைய திருக்கரங்களாலேயே திறந்து வைத்திருக்கிறார்.

**சமூக நீதிப் போராட்டங்களுக்கு முக்கியத்துவம் தந்த ஆட்சி!**

சமூகப் போராளி, சமூகப் போராளி என்று பல பேர் வாயளவில் பேசிக் கொண்டுதான் இருக்கிறோம். ஆனால், அந்த சமூகப் போராளிக்காக முக்கியத்துவம் தந்த ஆட்சி எதுவென்று சொன்னால், கழக ஆட்சி, கலைஞர் ஆட்சிதான் முக்கியத்துவம் கொடுத்த ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான், 1987 ஆம் ஆண்டு, அவர்கள் சமூக நீதிக்காகப் போராடிக் கொண்டிருக்கிறபோது 20 விழுக்காடு இடஒதுக்கீட்டிற்காகப் போராடிய காலம் அந்தக் காலம். அந்தக் காலக்கட்டத்தில்தான் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட 21 சமூகநீதிப் போராளிகளுக்கு அதனை நினைவுகூர்ந்து, இன்றைய முதலமைச்சர் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்தில் ரூ.5.70 கோடி மதிப்பீட்டில், நினைவு மண்டபம் கட்டப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால் அந்த மண்டபத்தை பொதுப் பணித் துறைதான் கட்டியது. 21 போராளிகளுடைய படங்களை அவரே நேரடியாக எடுத்து வரச் சொன்னார். படத்தை எடுத்து வரத் சொன்னது மாத்திரமல்ல, அந்த 21 படங்களைத் தேர்வு செய்த பின்பு, சிலை அமைக்கச் சொன்னார். எங்கள் பொதுப் பணித் துறையின் சார்பாக நாங்கள் சிலை அமைத்தோம். சிலை அமைத்தவுடன் அந்தப படத்தையும் எடுத்து வரச் சொன்னார்.

அந்தச் சிலையமைத்த படத்தையும் எடுத்துவந்து, ஏற்கெனவே உள்ள photoவையும் ஒன்றையொன்று ஒப்பிட்டுப்பார்த்து, இரண்டொரு படங்களில் முகம் கொஞ்சம் சரியில்லை, ஒத்துக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டார். இல்லை, இல்லை photoற்கும் இதற்கும் வேறுபாடு இருக்கிறது. நாளைக்கு இதை அவர்கள் குடும்பம் பார்த்தால் தவறாகிவிடக் கூடாது. நாளைக்கு நான் திறப்பு விழாவிற்கு வருகின்றபோது அவர்கள் என்னிடத்தில் ஏதாவது சொல்லிவிடக்கூடாது என்று சொல்லி, ஒரு பத்து நாட்கள் அதற்காக தள்ளிவைக்கப்பட்டு, அந்தச் சிலையை வடித்ததோடு மட்டுமல்ல, அந்த மண்டபத்தையும் 28-1-2020 அன்று முதலமைச்சர் அவர்கள் திருக்கரத்தினால் திறந்து வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**கொளத்தூரில் பிரம்மாண்டமான மருத்துவமனை!**

அதேபோன்று குளத்தூர், பெரியார் நகர். குளத்தூர் என்ற சொன்னால் ஒரு கிராமப் பகுதி என்பது மாதிரிதான் அதற்கு முன்னால் இருக்கும். இவர் சென்றுதான், அது town ஆக மாறியிருக்கிறது. ஏனென்றால் ஒரு காலத்தில் நான் அண்ணாநகரில் குடியிருந்தவன். குளத்தூர் பகுதி சாதாரண ஒரு கிராமப் பகுதி போன்றுதான் இருக்கும். ஆனால், இன்றைக்கு குளத்தூரில் பெரியார் நகரில் புறநகர் பகுதியில் இருக்கின்ற மக்களெல்லாம் பெரிதும் பயன்படுகிற வகையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை வார்டு, MRI Scan, CT Scan, புறநோயாளி பிரிவு, Xray பிரிவு, மகப்பேறு பிரிவு, மூன்று அறுவை அரங்கங்கள், இருதயப் பிரிவு, Cath Lab, புற்றுநோய் பிரிவு, நரம்பியல் பிரிவு போன்ற சிறப்பான வசதிகள் கொண்ட இரண்டு இலட்சம் சதுரடியில் 210 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 560 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையை பிரமாதமாக கட்டியதோடு மட்டுமல்ல, அதற்கு பகுத்தறிவு பகலவன் தந்தைப் பெரியாருடைய பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தென் பகுதியின் மையப் பகுதியில் இருக்கின்ற இந்த மருத்துவமனையை நாம் பயன்படுத்துகிறோம் என்று சொன்னால், வட பகுதியில் இருக்கின்ற கிராமத்திலிருக்கின்ற அந்தப் பகுதிகளில் இருக்கின்ற மக்களெல்லாம் அதைப் பயன்படுத்துவதற்கு ஒரு சிறப்பான மருத்துவமனையை கட்டியதோடு மட்டுமல்ல, 27-2-2025 அன்று அவர்களுடைய திருக்கரத்தினால் திறந்து வைக்கப்பட்டது.

## புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திக், கட்டப்பட்ட கட்டடங்கள் பல நூறாண்டுகளுக்கு நிலைத்து நிற்கும். இந்த கட்டடக் கலைக்கு “ஸ்டாலின் கட்டடக் கலை” என்று நாடு பிற்காலத்தில் பதிவு செய்யும்.

**இம்மானுவேல்சேகரன் மணிமண்டபம்!**

‘வெள்ளையனை வெளியேறு’ இயக்கத்திலே கலந்து கொண்டு சிறை சென்றவரும், இராணுவப் பணியிலிருந்து திரும்பி ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகவும், சமூக நீதிக்காகவும் போராடிய தியாகி இமானுவேல் சேகரனுக்கு இராமநாதபுரம் மாவட்டத்தின் பரமக்குடியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே திருவுருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபம் கட்டப்படுகிறது. முதலமைச்சர் அவர்கள் விரைவிலே திறந்து வைப்பார்கள்.

அதைப்போன்று கொங்கு மண்டலத்திலே தீரன் சின்னமலை என்ற புகழ்பெற்ற ஒரு சிற்றரசர். சுதந்திரப் போராட்டத்திலே அவர் ஈடுபட்டார். ஆனால், அவரோடு பொல்லான் என்கிற தளபதி சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டார்கள். ஆனால், அவர் இருக்கிற இடம் தெரியாத நிலையில், எதிர்க்கட்சியாக இருந்தபோதும் முதலமைச்சர் அவர்கள் சங்கரியிலே ஒரு மாநாடு நடைபெற்றபோது, அந்தப் பகுதியிலே இருக்கின்ற அருந்ததி பெருமக்களெல்லாம் ஒரு கோரிக்கை வைத்தார்கள். எங்கள் இனத்தைச் சேர்ந்த பொருளான் அவர்களும், தீரன் சின்னமலையோடு சுதந்திர போராட்டத்தில் சிறை சென்றார்; அவரும் உயிர் நீத்தார். ஆனால், அவர் மறக்கப்பட்டிருக்கிறார் என்று சொல்லி அருந்ததி பெருமக்களெல்லாம் ஒரு கோரிக்கைவைத்தார்கள். தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே, இன்றைக்கு கொங்கு மண்டலத்திலே ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், ஜெயராமபுரத்திலே சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையோடு சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்ட தளபதி பொல்லான் அவர்களுக்கு 4 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் அரங்கம் அமைக்கப்படுகிறது. விரைவிலேயே தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் நேரடியாக சென்று அதைத் திறக்கவுள்ளார்கள்.

**வைக்கம் - தந்தை பெரியார் நினைவகம்!**

சுயமரியாதை இயக்கத்தினுடைய முதல் வீரரும், உரிமைக் கிளர்ச்சியுனுடைய களப் பணியாளரும், வைக்கம் வீரர் என்று அழைக்கப்பட்டவருமான தந்தை பெரியார் வெற்றி கண்ட களம் வைக்கம். கேரளம் வைக்கம் நகரிலே தந்தைப் பெரியாரின் நினைவகம் ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் நவீன வசதியுடன் புதிய கட்டடம் கட்டப்பட்டு புதுப்பிக்கப்பட்டி ருக்கிறது. ஐந்தாயிரம் நூல்கள் இடம்பெறத்தக்க புதிய பெரியார் நூலகம் ஒன்ற கட்டப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரத்தால் 12—12-2000 அன்று திறந்து வைக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சிக்கு பொதுவுடமைச் சித்தாந்தத்தை சேர்ந்த கேரளாவின் முதலமைச்சராக இருக்கிற பினராயி விஜயன் அவர்கள் தலைமைப் பொறுப்பேற்றார்கள். தமிழர் தள ஆசிரியர் அண்ணன் கி. வீரமணி அவர்களும், நம்முடைய அவையினுடைய முன்னவராக இருக்கின்ற அருமை அண்ணன் துரைமுருகன் அவர்களும் அதற்கு முன்னிலைப் பொறுப்பேற்றார்கள். துறையினுடைய அமைச்சராக இருந்த என்னோடு இணைந்த நம்முடைய மு.பெ. சாமிநாதன் அந்த நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்தோம். தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளராக இருக்கின்ற நா. முருகானந்தம், கேரளாவின் உயர்மட்டத்திலே இருக்கிற தமிழ் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும், தலைமைச் செயலாளர் அவர்களும் அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டார்கள். வைக்கம் நிகழ்ச்சி என்பதுஒரு நகரப் பகுதியிலே இருக்கின்ற கட்டடம். அந்தக் கட்டடத்திலேயிருந்து நிகழ்ச்சி நடைபெறுகின்ற இடத்திற்கு செல்ல வேண்டுமென்று சொன்னால், ஏறத்தாழ ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு செல்ல வேண்டும். முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்துவிட்டு, முதலமைச்சர் அவர்களும், பினராயி விஜயன் அவர்களும், அண்ணன் துரைமுருகன் அவர்களும் காரிலே ஏறிக்கொண்டு செல்வதற்காக இருக்கிறார்கள். ஒரு 100 மீட்டர் தூரம் கூட செல்லவில்லை. எக்கச்சக்கமான கூட்டம். இன்றைக்கு தமிழ்நாட்டிலே முதலமைச்சர் அவர்கள் சென்றால், எங்கு பார்த்தாலும் மலையளவும், கடலளவும் கூட்டம் கூடுகிறது. அதைப்போல அந்த கேரள மாநிலத்திலே இரு பக்கமும் ஆண்களும், பெண்களும் கூட்டமாகக் கூடி நிற்கிறார்கள். வரிசை கட்டி நிற்கிறார்கள். முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிற குணம், ஆட்களைப் பார்த்தவுடனே காரை விட்டு இறங்கிவிடு வார்கள். அவர்களிடத்தில் இருக்கிற ஒரே குணம் அதுதான். கேரளாவில் அவர்கள் உடனே காரை விட்டு இறங்கிவிட்டார்கள். அவர்கள் காரிலிருந்து இறங்கியவுடனே கேரள மக்கள் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். அவரைச் சூழ்ந்து கொண்டு, ‘என்னுடைய சேட்டன், என்னுடைய சேட்டன், என்னுடைய சேட்டன், என்னுடைய சேட்டன்’ என்று அவரைக் கை குலுக்குகிறார்கள். என்னுடைய சேட்டன் என்றால் என்ன என்று நான் கேட்டேன். அதற்கு அவர்கள் எங்களுடைய அண்ணன், எங்களுடைய அண்ணன், எங்களுடைய அண்ணன் என்று பக்கத்திலிருந்து சொன்னார்கள். ஆக, ‘என்னுடைய சேட்டன், என்னுடைய சேட்டன்’ என்று அவர்கள் கை குலுக்கியதோடு மட்டுமல்ல, அவருக்குப் பின்னால் வந்த காரில், அங்கு கூடிய கூட்டத்தைப் பார்த்துவிட்டு முதலமைச்சர் வாகனத்திலே ஏறவில்லை. கேரளாவில், நிகழ்ச்சி நடைபெற்ற இடத்தில் ஒரு பெரிய ஊர்வலமே நடைபெற்றது.

அப்படியொரு சிறப்பான நிகழ்ச்சி நடைபெற்றது. ஆனால், இதையெல்லாம்விட, எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற என்னுடைய அருமை சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு ஒரு நிகழ்ச்சியை உங்களுக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். அப்போது ஒரு கேள்வியை என்னிடத்திலே கேட்டார். எப்பொழுது கேட்டார் என்று சொன்னால், அவர்களிடத்திலே நான் தேதி பெறுகிறேன். நீங்கள் கேரளாவுக்கு வந்து உங்களுடைய திருக்கரங்க ளாலே வைக்கம் நகரிலுள்ள பெரியார் நினைவிடத்தை திறந்து வைக்க வேண்டும். அதற்கு தேதி கொடுங்கள் என்று நான் கேட்கிறபோது, என்னிடத்திலே அவர் ஒன்றைக் கேட்டார். என்னென்ன படங்களை வைத்திருக்கிறீர்கள் என்பதற்கான ஆல்பத்தை எடுத்து வாருங்கள் என்று சொன்னார். அந்த மியூசியத்தில் என்னென்ன படங்களை வைக்கப் போகிறீர்கள், அதற்கான ஆல்பத்தை என்னிடம் வாருங்கள் என்று சொன்னார்.

ஏனென்றால், கேரள மாநிலம், வைக்கம் என்ற இடத்தில் ஏற்பட்ட போராட்டத்தில் பெரியாரோடு 17க்கும் மேற்பட்ட அரசியல் தலைவர்கள், காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்தவர்கள், பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்றில்லாமல், சமூக நீதிக்காக போராடிய பல தலைவர்கள் அதிலே இருந்தார்கள். 16க்கும் மேற்பட்டவர்கள் அவரோடு இருந்தார்கள். அதன் தொடர்ச்சியாக அண்ணன் கி.வீரமணி, அண்ணன் கலைஞர் போன்றவர்கள் இருந்த படங்களையெல்லாம் நான் எடுத்துக்கொண்டு அவர்களிடம் காட்டுகிறேன். ஒன்றன்பின் ஒன்றாக அந்தப் படங்களை அவர்கள் பார்த்துக்கொண்டே வருகிறார்கள். பார்த்துவிட்ட உடனே, திடீரென்று, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருந்த அம்மையார் அவர்களுடைய படத்தை இதில் காணவில்லையே என்று என்னிடத்திலே கேட்கிறார்கள்.

நான் கொஞ்சம் யோசிக்கிறேன். அவர்கள் முதலமைச்சராக இருந்தது எனக்குத் தெரிகிறது. ஆனால், நான் கொஞ்சம் யோசிக்கிறேன். நான் யோசிக்கிறபோது அவர்கள் சொன்னார்கள். அந்தமாதிரி படம் ஒன்றும் எனக்குக் கிடைக்கவில்லை அப்போது அவர்கள் சொல்கிறார்கள், இல்லை, இல்லை. பெரியாரும், அம்மையாரும் இரண்டு பேரும் உட்கார்ந்திருந்த படத்தை நான் பார்த்திருக்கிறேன். அந்தப் படம் எங்கே இருக்கிறது என்று கண்டுபிடியுங்கள் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு பல இடங்களில் சுற்றிப்பார்த்தேன். அப்போது ஒரு நாடக நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு, பெரியாரிடத்திலே நிதி கொடுத்த ஒரு நிகழ்ச்சியிலே அம்மையார் அவர்களும், பெரியார் அவர்களும் ஒரே மேடையில் உட்கார்ந்திருந்த படம் கிடைத்தது. அந்தப் படத்தைக் கொண்டுவந்து நான் காண்பித்தவுடனே முதலமைச்சர் அவர்கள் இது பொருத்தமாக இருக்கும் என்று சொன்னார்கள். ஏனென்றால், அவர்களும் முதலமைச்சராக இருந்தவர். நமக்கு partiality கிடையாது. அந்தப் படத்தை வைக்க வேண்டுமென்று சொன்னதன் அடிப்படையிலே, படம் வைத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையினால், தோழர்கள் யாராவது ஐய்யப்பன் கோயிலுக்குச் செல்கிறவர்கள், கேரளாவுக்குச் செல்கிறவர்கள் அங்கு சென்று பாருங்கள் என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

அதோடு மட்டுமல்ல, பொதுவாக, உறுப்பினர் மணி அவர்கள் பேசுகிறபோது இங்கே சொன்னார்கள். அந்த ஆட்சியில் ஒரு திட்டம் செய்தால், இந்த ஆட்சியில் ஒரு திட்டம் செய்தால்அந்தப் பழக்கமெல்லாம் கழகத்துக்கு எப்போதும், எந்தக் காலத்திலும் கிடையாது. எந்தக் காலத்திலும் கிடையாது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மதிய உணவுத் திட்டம் என்பது நீதிக் கட்சியினுடைய தலைவர் சர். பிட்டி. தியாகராயர் அவர்கள் காலத்திலே ஆரம்பிக்கப்பட்டது. அதனுடைய தொடர்ச்சியாக பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலே, நம்முடைய மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலே, அதற்குப் பிறகு அம்மையார் அவர்களுடைய காலத்திலே, அண்ணன் கலைஞர் அவர்களுடைய காலத்திலேஆனால், கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே அது எம்.ஜி.ஆர். கொண்டு வந்த திட்டம் என்று விட்டுவிடவில்லை. அதற்கு சத்துணவு என்று பெயர் வைத்திருக்கிறார்கள். ஆனால், சத்து இல்லையே என்கிற காரணத்தினால், வாரத்திற்கு 5 முட்டைகள் போட வேண்டுமென்று சொன்னவர் தமிழ்நாட்டு முதலமைச்சராக இருந்த அண்ணன் கலைஞர் அவர்கள். ஆகையினால், பாகுபாடு என்பது எப்போதும் கழகத்திற்குக் கிடையாது. ஏன்?

**பகைவனுக்கு கருள்வாய் நன் நெஞ்சே!**

நான் அதைச் சொல்கிறேன் என்றால், அம்மையார் அவர்களுக்கு நினைவிடம் கட்டப்பட்டு வந்தது. நினைவிடம் கட்டிவிட்டு,

billஐ எல்லாம் போட்டுக் கொண்டிருந்த கடைசி நேரத்தில் பார்த்தீர்களென்றால், ஆட்சியை விட்டு நீங்கள் செல்கிறபோது, ஏறத்தாழ 6 கோடி ரூபாய்க்கு bill போடாமல் சென்றுவிட்டீர்கள். அந்த ஒப்பந்ததாரர் 6 மாத காலம் கழித்து பயந்துகொண்டு, இவர்களிடத்திலே கேட்கலாமா, கேட்க வேண்டாமா என்ற பய உணர்வோடு என்னை அணுகி, 6 கோடி ரூபாயை என்னுடைய Chief Engineer விஸ்வநாதன். ஏற்கெனவே அந்த ஆட்சியிலும் ENC ஆக இருந்தவர், நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகும் அவர்தான் ENC ஆக இருந்தார். 6 மாதகாலம் கழித்து அந்த billஐ என்னிடம் கொண்டுவந்து காண்பித்தார். ஐயா 6 கோடி ரூபாய் என்றார். எதற்கு 6 கோடி ரூபாய் என்று நான் கேட்டேன். அம்மையார் அவர்களுடைய நினைவிடத்தைக் கட்டுவதிலே 6 கோடி ரூபாய் கொடுக்காமல் நின்றுவிட்டது. ஐயா, நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டார்? எனக்கு கொஞ்சம் அச்சம். நான், உடனே முதலமைச்சர் அவர்களிடத்திலே கேட்டு விடலாமே என்று அந்த billஐ எடுத்துக்கொண்டு சென்றேன். முதலமைச்சர் அவர்கள் தனியாக இருக்கிறபோது அந்த billஐ எடுத்துக்கொண்டு சென்று நான் கேட்டேன். சார், அம்மையார் அவர்களுக்கு நினைவிடம் கட்டிய ஒப்பந்ததாரருக்கு 6 கோடி ரூபாய் கொடுக்க வேண்டியது நின்றுவிட்டது. எனவே, அந்த 6 கோடி ரூபாயைக் கொடுக்க வேண்டுமென்று Chief Engineer சொல்கிறார் என்று நான் சொன்னவுடனேயே முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதை ஏன் நீங்கள் என்னிடம் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். முதலில் அதைக் கொடுத்துவிட்டு வந்து என்னைப் பார்த்துச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

‘பகைவனுக் கருள்வாய்-நன்நெஞ்சே!’

என்று பாரதியார் அவர்கள் சொன்ன வாக்கியம் தான் எனக்கு இந்த நேரத்திலே நினைவுக்கு வருகிறது.

கோவையில் ரூ.300 கோடி மதிப்பீட்டில் 1 இலட்சத்து 98 ஆயிரம் சதுரடியில் மற்றும் திருச்சியில் ரூ.290 கோடி மதிப்பீட்டில் தரைத்தளத்தில் நூலகம் அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் திருக்கரத்தால் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். குறிப்பிட்ட தேதியில் கட்டித்தர வேண்டுமென்று பொதுப் பணித் துறையின்மீது வைத்திருக்கிற நம்பிக்கையின் அடிப்படையில் சொல்லியிருக்கி றார்கள். ஜனவரி மாதத்திற்குள் கட்ட வேண்டுமென்று தேதியையும் அவர்கள் அறிவித்தார்கள். அதை இலக்காக வைத்துக்கொண்டு, இரவும் பகலும் பாராமல் பொதுப் பணித் துறையில் இருக்கிற பொறியாளர்கள் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**மதிய உணவுத் திட்டம்!**
**புதுடெல்லி தமிழ்நாடு இல்லம்!**

அதேபோன்று புதுடெல்லியில் தமிழ்நாடு இல்லம்; தலைநகர் புதுடெல்லியில் தமிழ்நாடு வைகை இல்லம் வளாகத்திலே ரூ.257 கோடி மதிப்பீட்டில் புதிய இல்லம் ஒன்று கட்டப்பட்டு, அதற்கு 2672024 அன்று முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். அந்தப் பணி சிறிது காலதாமதம் ஆகியிருக்கிறது. காரணம் என்னவென்றால், பக்கத்தில் Prime Minister இல்லம் இருக்கிறது. இரவு நேரத்தில் பணிகளைச் செய்ய முடிவதில்லை. ஏனென்றால் சத்தம் போட்டால் Police அங்கிருந்து வந்துவிடுகிறார்கள். டெல்லியைப் பொறுத்தவரைக்கும் பார்த்தால், 15 நாட்கள், 20 நாட்கள் pollution என்று சொல்லி நிறுத்திவிடுகிறார்கள். இருந்தாலும் இடைப்பட்ட நேரத்தில் எங்களுடைய பொறியாளர்களின் திறமையோடு அந்தப் பணிகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம்.

அதேபோன்று சென்னை எழும்பூரில் Unity Mall என்கிற சென்னை எழும்பூர் கோஆப்டெக்ஸ் வளாகத்தில் ரூ.227 கோடி மதிப்பீட்டில் 4.5 இலட்சம் சதுர அடியில் 29-1-2025 அன்று தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய திருக்கரத்தால் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். அந்தப் பணிகளும்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்